கடித நகல்

சுருக்கம்

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கத்தில் உள்ள ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் பணியிடங்களுக்கான வழக்காற்றுச் சொல் (Nomenclature) – தற்போது நடைமுறைபடுத்தப்பட்டு வரும் திட்டங்களின் அடிப்படையில் மாற்றியமைப்பது – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை

அரசாணை (நிலை) எண்.109

நாள்.7.12.2010

படிக்கவும்:–

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் எண்.53729/2010/ஜி.இ1.1, நாள்.31.8.2010 மற்றும் 30.9.2010

ஆணை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் உள்ள ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் பணியிடங்களுக்கான தற்போதைய வழக்காற்றுச் சொல்லை மாற்றக் கோருவதற்கான அவசியத்தினையும், காரணத்தினையும் தெரிவித்து கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் உள்ள 6 ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் பணியிடங்களுக்கான வழக்காற்றுச் சொல்லை (Nomenclature) மாற்றிடக் கோரி கருத்துருவினை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

| வ. எண் | நடைமுறையில் உள்ளது | பரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்றம் |
|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (பணியமைப்பு) (Establishment) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) (Administration) |
| 2. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (தே.ஊ.வே.உ.தி) (NREGS) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (ஊதிய வேலைவாய்ப்பு) (Wage Employment) |
| 3. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (திட்டங்கள்) (Schemes) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (மாநில அரசு திட்டங்கள்) (State Schemes) |
| 4. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (டிரைசம்) (TRYSEM) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (மத்திய அரசு திட்டங்கள்) (Central Schemes) |
| 5. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (கரிமவாயு) (Bio-gas) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர்(சாலை மற்றும் பாலங்கள்) (Roads and Bridges) |
| 6. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (சுகாதாரம்) (Sanitation) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (ஊராட்சி அமைப்புகள்) (Panchayat Raj Institutions) |

2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் தற்போது உள்ள ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் அனைத்தும் (ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (பணியமைப்பு) பணியிடம் நீங்கலாக) இத்துறையால் செயல்படுத்தப்பட்ட திட்டங்களான கரிமவாயு, சுகாதாரம் மற்றும் டிரைசம் ஆகியவற்றிற்காக ஏற்படுத்தப்பட்டவை. மேற்காணும் திட்டங்களை நிறைவேற்றும்போது மக்களிடம் அத்திட்டத்தைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கில் அத்திட்டத்தின் பெயரிலேயே அந்த ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் பணியிடங்கள் அழைக்கப்பட்டு வந்தன. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி பணி சிறப்பு விதிகளில் ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் பதவிக்கான வழக்காற்றுச் சொல் எதுவும் இடம்பெறவில்லை. மேற்காணும் திட்டங்களின் செயலாக்கம் முடிந்து வேறு புதிய திட்டங்கள் தற்போது இத்துறையில் செயல்படுத்தப்பட்டு வருவதால் மேற்காணும் கூடுதல் இயக்குநர் பணியிடங்களை பழைய திட்டங்களின் பெயரில் அழைப்பது / வழக்காற்றுச் சொல்லை பயன்படுத்துவது சரியான ஒன்றாக இருக்காது. எனவே, தற்போது செயல்படுத்தப்படும் திட்டங்களின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் பணியிடத்திற்கான வழக்காற்றுச் சொல்லை மாற்றி அழைப்பதுதான் மிகச்சரியாக இருக்குமென அரசு முடிவு செய்துள்ளது.

3. மேற்காணும் நிலையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை ஏற்று, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தில் உள்ள 6 ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் பணியிடங்களுக்கான வழக்காற்றுச் சொல்லை கீழ்கண்டவாறு மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | நடைமுறையில் உள்ளது | பரிந்துரைக்கப்பட்டுள்ள மாற்றம் |
|---|---|---|
| 1. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (பணியமைப்பு) (Establishment) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) (Administration) |
| 2. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (தே.ஊ.வே.உ.தி) (NREGS) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (ஊதிய வேலைவாய்ப்பு மற்றும் மகாத்மா காந்தி தேசி ஊரக வேலை உறுதித் திட்டம்) (Wage Employment and Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme) |
| 3. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (திட்டங்கள்) (Schemes) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (மாநில அரசு திட்டங்கள்) (State Schemes) |
| 4. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (டிரைசம்) (TRYSEM) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (மத்திய அரசு திட்டங்கள்) (Central Schemes) |
| 5. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (கரிமவாயு) (Bio-gas) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (சாலை மற்றும் பாலங்கள்) (Roads and Bridges) |
| 6. | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (சுகாதாரம்) (Sanitation) | ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் (ஊராட்சி அமைப்புகள்) (Panchayat Raj Institutions) |

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை –15
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் (பயிற்சி), சென்னை –15
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

மேற்குறிப்பாணை நக.எண். 53729/2010/ ஜி.இ1.1 நாள்.10.12.2010

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்கம், சென்னை–15

அனுப்பப்படுகிறது

ஒம்/–XXXXXXXX
இயக்குநருக்காக

பெறுநர்
அனைத்து கூடுதல் இயக்குநர்கள்,
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15

நகல்

1. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் (பயிற்சி), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை –15
2. இணை இயக்குநர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை –15.
3. உதவி இயக்குநர் நிலை அலுவலர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை –15.
4. அனைத்து பிரிவுகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை –15.
5. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சென்னை நீங்கலாக)
6. அனைத்து திட்ட இயக்குநர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
7. அனைத்து திட்ட அலுவலர்கள் (மகளிர் திட்டம்)
8. சுனாமி திட்ட செயலாக்கப் பிரிவு, சென்னை –1
9. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை –32.
10. இயக்குநர், மாநில ஊரக வளர்ச்சி நிறுவனம், மறைமலைநகர், காஞ்சிபுரம்
11. அனைத்து மண்டல ஊரக வளர்ச்சி நிறுவனம் முதல்வர்கள்.
12. இருப்புக்கோப்பு

கண்காணிப்பாளர்
15/12/10